egistered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★


# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி

தபால் பெட்டி எண்; 49
தொ ந 389
மலர் 14
இதழ் 132

யாழ்ப்பாணம் ஆனி 9 ரபி; அவ்; 10 வியாழக்கிழமை (22-6 72)

பிரகாசமான - நீகரற்ற வெண்மை தருவது!




எங்கும் கிடைக்கும்

# பள்ளிமாணவர் அனைவருக்கும் விட்டமின் பனிஸ் கிடைக்கும்

## 'பிஸ்கட்' வழங்குவதை நிறுத்துவதுபற்றி ஆலோசனை

கொழும்பு, புதன்
பாடசாலை பிள்ளைகள் அனைவருக்கும் எல்லா விட்டமின்களும் அடங்கிய பனிஸ் ரொட்டி ஒவ்வொன்று வீதம் கிழமைக்கு ஒரு தடவை வழங்குவதற்கு கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது.

இதன் காரணமாக இப்பொழுது தினந்தோறும் பள்ளி பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டு வரும் பிஸ்கட்டுகளை முற்றாக நிறுத்திவிடுவதா அல்லது அரிவரிப் பிள்ளைகள் தொடங்கி 5-ம் வகுப்பு பிள்ளைகளுக்கு மாத்திரம் தொடர்ந்து பிஸ்கட்டுகளை வழங்கிவருவதா என்பதுபற்றி கல்வி அமைச்சு இப்பொழுது ஆலோசித்து வருகின்றது.

பிஸ்கட்டு கொடுப்பதை நிறுத்துவதற்கு முடிவு செய்யப்படுமானால் கிழமையில் ஒருதினத்தில் மாத்திரம் பள்ளிமாணவர்களுக்கு விட்டமின்பனிஸ் கிடைக்கும். 5-ம் வகுப்புவரையில் மாத்திரம் பிஸ்கட்டு கொடுக்க முடிவு செய்யப்படுமானால் கிழமையில் ஒருதினம் விட்டமின் பனிசும் 5-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் கிடைக்கக் கூடியதாய் இருக்கும்.

விட்டமின் பனிஸ் கொடுக்கும் திட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதத்திலிருந்து அமுலுக்குவருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வங்கிக்கொள்ளையில் எண்மர் கைது!

கொழும்பு, புதன்
சென்ற மாதம் கொரளையில் நடந்த வங்கிக் கொள்ளை சம்பந்தமாக முன்னாள் பத்திரிகையாளர் உட்பட எண்மர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கொழும்பிலிருந்து முப்பது மைல் தூரத்தில் உள்ள கொரளை மக்கள் வங்கிக் கிளைக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட இந்த எண்மரும் ஆங்கிலம் பேசக்கூடிய சந்தேகக்காரர் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் பல்வேறு பகுதி

(5-ம் பக்கம் பார்க்க)

## 'தமிழில் நிரந்தரஇடமில்லை என்பதை மறைக்க முயற்சி'

### கோப்பாய் எம். பி. அறிக்கை

யாழ்ப்பாணம், வியா
நீதிமன்றங்களில் பதிவேடுகள் தமிழில் வைப்பதற்கு அரசியல் அமைப்பில் இடமில்லை என்பதை மறைப்பதற்கு முயற்சி நடக்கிறது. தமிழில் பதிவேடுகள் வைப்பதற்கு எந்த ஊழியர்களும் அனுப்பப்படவில்லை. அதற்கு மாறாக இவ்வாறான சிங்களத்தில் பதிவேடுகளை வைப்பதற்கு வேண்டிய ஊழியர்கள் வடக்குகிழக்கு மாகாண நீதிமன்றங்கள் பலவற்றுக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள்.

வடக்கு கிழக்கு நீதிபரிபாலனம் சம்பந்தமாக நீதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் கூற்றறிக்கை பற்றி இலங்கை தமிழரசுக்கட்சி பொதுச்செயலாளர் திரு சி. கதிரவேலுப்பிள்ளை விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு கிழக்கு மாகாண நீதிபரிபாலன உத்தியோகத்தர்களுக்கு நீதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சென்றவாரம் அனுப்பிய கூற்றறிக்கை மிகத் தந்திரமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

எக்காரணம் பற்றியும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகிப்பதைக் கைவிட்டு வழக்காளிகள் அல்லது அவர்களின் கணிசமான பெரும்பான்மையினர் தமிழராயிருக்கும் இடங்களில் நீதிமன்ற நடவடிக்கைகள் கூடுமானவரை தமிழ்மொழியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டால் நான் நன்றியுள்ளவனாயிருப்பேன் என்ற அமைச்சர் கூறுவதை ஏற்றுக்கொள்வதோடு எல்லாத் தமிழ்பேசும் வழக்காளிகளையும் வழக்குரைஞர்களையும் கூடுமானவரை தமது வேலையைத் தமிழில் நடத்துமாறு நாம் வேண்டுகிறோம்.

ஆனால் அமைச்சரின் கூற்றறிக்கையின் அடுத்த பகுதி விசித்திரமாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது. 11ம் பிரிவின் 1ம் உப பிரிவின் கட்டாயமான ஏற்பாடுகளின் பிரகாரம் சிங்களப் பதிவேடுகளும் வைக்கப்படவேண்டுமென்பது உண்மை. பதிவே

5-ம் பக்கம் பார்க்க

## இன்று கூடுகிறது

கொழும்பு, வியா
தேசிய சட்டப்பேரவை இன்று கூடுகிறது. சில சட்டவிதிகளை அங்கீகரிப்பதற்காக இன்று தேசிய சட்டப் பேரவை கூடுகிறது.

பொலிஸ் நிலையத்துக்கருகில்

## ஐந்து எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டன

### இரு பொலிஸார்மீது பிடிவிருந்து

கொழும்பு, புதன்
வசாமுல்லைப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திலிருக்கும் ஒரு மரத்தின்கீழ் நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த ஐந்து நபர்களின் எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டன. இந்த எலும்புகளிலுள்ள முறிவுகள் இவர்கள் இறப்பதற்கு முன்பு துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயமடைந்திருக்கலாம் என சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சி. அமரசேகரா, தங்காலை மாஜிஸ்ரேட்டிடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

குற்றப் பிரிவுச் சட்டத்தின் 300-வது பிரிவின்கீழ் மாஜிஸ்திரேட் இருபொலிஸ் அதிகாரிகள் மீது பிடிவிருந்து பிறப்பித்துள்ளார்.

1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி (சிங்களப் புதுவருடம்) வசாமுல்லை பொலிசார் தனது சகோதரனையும் நண்பர்களையும் கொடூரமான முறையில் கொலை செய்தனர் என்று கெக்கனதுறை வாசியான விக்கிரமசிங்கா என்பவர் மாத்தறையில் இன்ஸ்பெக்டர் பொன்சேகாவிடம் முறைப்பாடு செய்தார்.

இன்ஸ்பெக்டர் பொன்சேகா இவ்விஷயத்தை தங்காலைக்குச் சென்று மாஜிஸ்திரேட்டிடம் அதனைத் தோண்டிப்பார்க்க நடவடிக்கை எடுக்க முயற்சித்த பொழுதிலும் அவசரகாலச் சட்டம் காரணமாக அவ்விஷயத்தை மேற்கொண்டு தொடரமுடியாமற் போய்விட்டதாம்.

இச்சம்பவம் நடைபெற்ற ஒருவருடத்திற்குப் பின்பு தங்காலை மாஜிஸ்திரேட்டாகப் பொறுப்பேற்ற திரு. சி. சுந்தரலிங்கத்தின் கவனத்திற்கு இவ்விஷயம் கொண்டு வரப்பட்டது. மாஜிஸ்திரேட் குறிப்பிட்ட இடத்தை தோண்டி சோதிக்குமாறு வைத்திய அதிகாரி டாக்டர் திஸ்ஸ விக்கிரமசூரியாவுக்கு உத்தரவிட்டார்.

எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கும் பொழுது மாஜிஸ்திரேட் நேரில் பார்வையிட்டு, அவ்வெலும்புக் கூடுகளை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் கருத்தையும் விபரங்களையும் அறிய அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வெலும்புக் கூடுகள் நேரடி கட்டுப்பாடான விஷேட பாதுகாப்புக் குழுவினரின் பார்வையின்கீழ் பார்சல் செய்யப்பட்டு பாதுகாப்புடன் கொழும்புக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

தங்காலை மாஜிஸ்திரேட் திரு. சுந்தரலிங்கத்துக்கு கொழும்பு சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சி. அமரசேகரா துப்பாக்கிச் சூடு [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## புதுக்கடைத் திறப்புவிழா

சுன்னாகம் சென்றல் ஸ்ரோர்ஸ்

அன்புடையீர்!

நிகழும் பரிதாபி வருடம் ஆனி மாதம் 10-ம் நாள் 23-6-72 வெள்ளிக்கிழமை பகல் 11 மணி 56 நிமிஷம் முதல் 1 மணி 27 நிமிஷம் வரையுள்ள சுபவேளை சுபலக்கினத்தில் எமது சுன்னாகம் சென்றல் ஸ்ரோர்சில் வெளிநாட்டு உள்நாட்டு பதுமான வியாபாரம்செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமூகம் தந்து சிறப்பிக்குமண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை

இங்ஙனம்

திருமதி ப. பெரியதம்பி, - ப. பெரியதம்பி
"கலைவதி". ந 10, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி. சுன்னாகம்
சுன்னாகம். 4258

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விமானக் கடத்தலுக்கு ஐ. நா. பந்தோபஸ்து சபை கண்டனம்

## தீவிர நடவடிக்கை எடுக்க உலக நாடுகளுக்கு வேண்டுகோள்

நியூயோர்க், ஜூன் 21

சர்வதேச விமானக்கடத்தலை ஐக்கிய நாடுகளின் பந்தோபஸ்து சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

சர்வதேச விமானக் கடத்தலை தடுப்பதற்கு உறுதியான தீவிர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கக்கோரி சர்வதேச விமான ஓட்டிகள் கடந்த திங்கட்கிழமை ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்ததைத்தொடர்ந்து பந்தோபஸ்துசபை கூடி இதுபற்றி ஆராய்ந்தது.

15 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட பந்தோபஸ்துசபை இக்கண்டனத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

சட்டவிரோதமாக விமானங்களை கடத்துவதை தடுக்கும் நடவடிக்கைகளை உலகநாடுகள் எடுக்க வேண்டுமென அத்தீர்மானம் உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ. நா. வின் நிகழ்ச்சி பொதுக் கருத்தின் அடிப்படையிலேயே இத்தீர்மானம் உருவாக்கப்பட்டதென ஐ. நா. பேச்சாளர் தெரிவித்தார்.

விமானக்கடத்தல் தடுப்பதற்கு விரிந்தளவிலும் தீவிரமாகவும், கூடிய அளவுக்கு விமானப் பிரயாணிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியவரை முயற்சிக்குமாறு அதன் அங்கத்துவ நாடுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

### அமெரிக்கா வரவேற்பு

பந்தோபஸ்து சபையின் இத்தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்பதாக ஐ. நா. வுக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## இன்று ஆரம்பம்

லண்டன், ஜூன் 22

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 2வது கிரிக்கெட் போட்டி இன்று லோட்ஸில் ஆரம்பமாகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்துக் கோஷ்டி வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

## புதிய போதனை வகுப்புகள்

கோப்பாய், புதன்

தேசிய மூலாமையும் பெருமானம் மதிப்பிடலும் "பொது நிதியும் வரிவிதிப்பும்" ஆகிய இரு புதிய போதனை வகுப்புகள் இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு நிலையத்தில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இதுவரையில் இங்கு போதிக்கப்பட்ட சமூகவியல், மனிதப் பண்பியல் பயிற்சி நெறிகள் ஏற்றப்பட்டு இடமிருந்து பதிலாகவே இப்புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான வகுப்புகள் ஜூலை மாதம் 17ம் திகதி ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்ஸ் அணுபரிசோதனை

## அணுசோதனைப்பகுதியில் எதிர்ப்பாளர் படகு

மெல்போர்ன் ஜூன் 21

பசுபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் நடத்தவிருக்கும் அணுகுண்டுப் பரிசோதனையை தடுக்கும் நடவடிக்கையில் அவுஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் கூட்டாக முயற்சியில் இறங்கியுள்ளன.

உலக நாடுகளின் ஏகோபித்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பிரான்ஸ் அணுகுண்டுப் பரிசோதனையை பசுபிக் சமுத்திரத்தில் நடத்த இருப்பது தெரிந்ததே. ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ. நா. படைக்குறைப்பு மகாநாட்டில் இவ்விஷயத்தை ஆராயுமாறு இவ்விருநாடுகளும் கேட்டுக்கொண்டுள்ளன.

இதற்கிடையில் அணு ஆயுத எதிர்ப்பாளர் ஒரு படகில் பரிசோதனை நடைபெறவிருக்கும் பசுபிக்சமுத்திரத்தில் நிலைகொண்டிருப்பதாகவும் அப்படகு கனடாவுக்குச் சொந்தமானதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இச் செய்தியை கனடா அரசாங்கம் மறுத்துள்ளது.

## விலை குறையும்

யாழ்ப்பாணம், வியா

ருத்தல் 1-50 சதம்முதல் 2 ரூபாவரை விற்பனையாகும் சின்னவெங்காயத்தின் விலை அடுத்தமாதம் முதல் குறிப்பிடத் தக்க அளவு குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனையிறவுத் தடை நீக்கப்பட்டதையடுத்து வடபகுதியில் தனிப்பட்ட வியாபாரிகள் வெங்காயத்தை கூடுதலாக கொள்வனவு செய்து வெளியிடங்களுக்கு கொண்டுசென்றதினால் வடபகுதியில் இதனைக் குறைந்த விலைக்குப் பெறுவதற்குக் கஷ்டமாக இருப்பதாக வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சமாஜத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆடி, ஆவணி மாதத்தில் யாழ் மாவட்டத்தில் சுமார் 6 லட்சம் அந்தர் வெங்காயம் அறுவடை செய்யப்படவிருப்பதனால் இதன் விலை குறைய ஏதுவாகும் எனத் தெரிகிறது.

## பூங்காவன உற்சவம்

யாழ்ப்பாணம், வியா

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய பூங்காவனத் திருவிழா இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவிருக்கிறது. விசேஷ மேளக் கச்சேரிகளும் வில்லுப்பாட்டு, மெல்லிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். அலங்காரப் பந்தலில் அன்றிரவு அம்பாள் வீற்றிருப்பார்.

தென் வியட்நாம்

## அமெ. படைகள் தொகை குறைக்கப்படும்?

வாஷிங்டன் ஜூன் 21

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் விசேட ஆலோசகர் டாக்டர் கிஸிங்கர் வியட்நாம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வாஷிங்டன் திரும்பியுள்ளார்.

டாக்டர் கிஸிங்கர் வியட்நாம் பிரதமர் குயென் வான் தியூவுடனும் மற்றும் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். டாக்டர் கிஸிங்கரைக் கௌரவிக்கும் முகமாக அவருக்கு வியட்நாம் பிரதமர் கௌரவ விருந்தொன்றளித்தார்.

டாக்டர் கிஸிங்கர் வியட்நாம் தலைவர்களுடன் எதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பதுபற்றித் தெரியாவிட்டாலும் வியட்நாம் பிரச்னைபற்றி முக்கியமாகப் பேசப்பட்டிருக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### ஹனோய் மௌனம்

கிஸிங்கரின் வியட்நாம் விஜயம் சோவியத் அதிபரின் ஹனோய் விஜயம் ஆகியவை பற்றி ஹனோய் மௌனம் சாதிக்கின்றது.

இதற்கிடையில் வியட்நாமிலுள்ள அமெரிக்கப் படைகளில் ஒருபகுதியினர் திருப்பியழைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான புதிய அறிவிப்பொன்றை ஜனாதிபதி நிக்ஸன் ஜூலை முதல் திகதியில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது வியட்நாமில் 60 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் இருக்கின்றன.

இதற்கிடையே தென்வியட்நாமிலுள்ள அமெரிக்கப் படைத் தளபதியை திருப்பி அழைத்து புதிய ஒருவரை நிக்ஸன் நியமித்துள்ளார்.

### கூட்டம்

சாவி, புதன்

சாவி ஸ்ரீமீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலய பரிபாலனசபையினரின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 24-ந் திகதி இரவு நடைபெறவிருக்கிறது.

## விவசாயிகள் சங்கங்கள் புனரமைப்பு

குருநகர், புதன்

தீவுப்பகுதியிலுள்ள இளம் விவசாயிகள் சங்கங்களை புனரமைப்புச் செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இக்கழகங்களைக் கூடிய காலபோக செயற்படு திட்டத்திற்கான செயல்முறைகளை ஆராய்வதற்கும், இப்பகுதி விவசாய கழகங்களை விவசாய விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடுத்துவதற்கும் தீவுப்பகுதி விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. கே. இராமலிங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

காலபோக செயற்படுதிட்டத்திற்கான செய்கை முறைக்குரிய சிலவேலைத் திட்டங்களை தீவுப்பகுதிக்காரியாதிகாரி மூலம் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

—

## பவுண் விநியோகம்

யாழ்ப்பாணம், வியா

1970ம் ஆண்டுக்குரிய பவுண் விநியோகத்தை இம்மாத முடிவுக்குள் வழங்குவதற்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா எடுத்துள்ளார்.

யாழ்ப்பாண ஆவரணத் தொழிலாளர் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக இந்நடவடிக்கையை அரசாங்க அதிபர் எடுத்துள்ளார்.

1971-ம் ஆண்டுக்கான பவுண் விநியோகம்பற்றி தொழில் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவர மேற்படி சங்கம் முயற்சி செய்யுமென சங்கக் காரியதரிசி திரு. வை. நடராசா தெரிவித்துள்ளார்.

## "பாக். மக்களின் நலனிலேயே இந்தியாவுக்கு அதிக அக்கறை"

### உச்சி மாநாடு பற்றி திருமதி காந்தி

பிரேக், ஜூன் 21

"பாகிஸ்தானுடன் நடக்கவிருக்கும் உச்சி மகாநாட்டில் பாகிஸ்தானை வெற்றி கொண்ட நாடு என்ற முறையிலல்லாமல், பாகிஸ்தான் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நாடு என்ற முறையிலேயே இந்தியா கலந்து கொள்கிறது."

இந்தியப் பிரதமர் திருமதி காந்தி பிரேக்கில் தெரிவித்தார். செக்கோஸ்லோவேகிய விஜயத்தை முடித்துக் கொண்டு ஹங்கேரிக்குப் புறப்படுவதற்கு முன்பாக செக் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே திருமதி காந்தி இவ்வாறு கூறினார்.

திருமதி காந்தி சர்வதேசப் பிரச்னைகளில் இந்தியாவின் நிலைபற்றி விளக்கிக்கூறினார். பாகிஸ்தான் பலவீனமான நாடாக இருக்கவேண்டுமென்று இந்தியா எப்பொழுதும் விரும்பியதில்லை, அதற்குமாறாக அது பலத்துடனும் வளர்ச்சியும் சுபீட்சமும் கொண்ட ஒரு நாடாக இருக்கவேண்டுமென்றே இந்தியா விரும்பி வந்துள்ளது. இருநாடுகளும் நல்லுறவுடன் இருந்து இருநாட்டு மக்களும் நலத்துடன் வாழ்வதற்கு இந்தியா பல முயற்சிகள் எடுத்து வந்திருக்கிறது. துரதிஷ்டவசமாக இதற்கு மறுதரப்பிலிருந்து இணக்கம் தெரிவிக்கப்படவில்லை என்று கூறிய திருமதி காந்தி, கூட்டுச்சேராக் கொள்கையே இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்றும் சோஷலிசம் உள்நாட்டுக்கொள்கை என்றும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் இந்தியவுக்கு மேற்கத்திய நாடுகளிடமிருந்தும் சோஷலிச நாடுகளின் உதவி அதிகமாகக் கிடைத்திருக்கிறது. அமெரிக்காவுடன் நல்லுறவாக இருக்கவே இந்தியா விரும்புகிறது என்றார்.

## பாரதம் - செக். கண்டனம்

வடவியட்நாம் மீதான அமெரிக்கக் குண்டுவீச்சை இந்தியாவும் செக்கோஸ்லொவேக்கியாவும் கூட்டாக விடுத்த அறிக்கையில் கண்டித்துள்ளன.

வடவியட்நாம் தலைநகர் ஹனோய் மீதும் மற்றும் துறைமுகங்கள் மீதும் குண்டு வீச்சு நடத்தி துறைமுகங்களுக்குச் செல்லவிடாது தடுப்பது மிகவும் பாரதூரமான விஷயம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்காளதேச விஷயத்தில் இந்தியா கடைப்பிடித்த கொள்கையை செக்கோஸ்லவேக்கியா வரவேற்றுள்ளது.

## உச்சி மாநாட்டுக்கு முஜிபுர் வாழ்த்து

டாக்கா, ஜூன் 21

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறவிருக்கும் உச்சி மகாநாட்டுக்கு வங்காளதேஷ் [illegible] வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

வங்காள தேசத்தை பாகிஸ்தான் அங்கீகரிக்காதவரை உச்சிமகாநாட்டில் வங்காள தேசம் கலந்து கொள்வது பற்றிய பிரச்னையே எழாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

